தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சட்ட மன்ற மேலவையின் நாற்பத்தி ஏழாவது கூட்டத் தொடர்.

திங்கட்கிழமை, 1974 ஏப்ரல் 22.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. புதிய உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளும் பிரமாணம் அல்லது உறுதிமொழி

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களே, மேலவைக்கு அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று வந்துள்ள 17 உறுப்பினர்களையும், ஆளுநர் அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ள மூவரையும் நான் மெத்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். இவ்வவைக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட 6 உறுப்பினர்களுக்கும் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 11 உறுப்பினர்களுக்கும், புதிதாக நியமனம் செய்யப்பட்ட 3 உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலவையில் பல மேதைகளும், விற்பன்னர்களும் இடம் பெற்று பணியாற்றியுள்ளார்கள். இங்கு நடைபெறும் விவாதங்கள் மிகவும் தரமுள்ளதாகவும், உறுப்பினர்கள் கூறும் கருத்துக்கள் மிகவும் பயனுடையதாகவும் இருந்து வந்திருக்கின்றன. ஒப்புரவு, ஒருவரையொருவர் மதித்தல், கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறந்த மரபுகளையும், வழக்காறுகளையும் நிலைநாட்டியுள்ளனர். அம் மரபு முறை கெடாத வகையில் தொடர்ந்து பாராளுமன்ற நடைமுறைகளை நல்ல முறையில் பேணிக் காத்து, இவ்வவையின் சிறந்த பாரம்பரியத்தைக் காக்கவும், மேம்படுத்தவும் உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

புதிய உறுப்பினர்கள் எடுத்துக்கொள்ளும் பிரமாணம் அல்லது உறுதிமொழி

[மேலவைத் தலைவர்] [1974 ஏப்ரல் 22

இன்றைய அலுவல் பட்டியலில் உள்ள இனம் புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட, நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வதாகும். மேலவை விதி 3-அ-வின்படி சட்ட மன்ற மேலவை உறுப்பினர்கள் ஒவ்வொரு வரும் அவையில் முதன்முதலாகத் தத்தம் இருக்கைகளில் அமருமுன் இந்திய அரசியலமைப்பின் 188-வது பிரிவில் விதித்துள்ளபடி உறுதிமொழி கூறி, அதில் கையொப்பமிட வேண்டும். இம் மன்றத்தில் கடைப்பிடித்து வரும் மரபினை யொட்டி, மேலவைச் செயலாளர் உறுப்பினர்களின் பெயர்களை அகர வரிசைப் படி அழைப்பார். உறுப்பினர்கள் மேடையருகே வந்து உறுதிமொழி அச்சிட்ட இதழைப் பெற்று, அதன்படி உறுதிமொழி எடுத்துக்கொண்டு, அதிலும், பதிவேட்டிலும் கையெழுத்திட்டுவிட்டு, அவைத் தலைவருடன் கை குலுக்கிய பின், தங்கள் இருக்கைகளுக்குச் சென்று அமரும்படி வேண்டிக்கொள்கிறேன். உறுப்பினர்களுக்கு இருக்கைகள் ஒதுக்கித் தரும்வரை, வெற்றிடமாக உள்ள இருக்கைகளில் எதில் வேண்டுமானாலும் அமரலாம்.

இப்பொழுது உறுப்பினர்களைச் செயலாளர் அவர்கள் உறுதிமொழி எடுத் துக் கொள்வதற்கென அழைப்பார்கள்.

(பின்னர் செயலாளர் அவர்கள் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்படி அழைத்தார்கள்.)

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர் :—

(1) * திரு. கே. எஸ். அப்துல் வகாப் (ஆ)
(2) திரு. க. அறிவழகன் (த)
(3) * திரு. ஏ. பாலசுப்ரமணியம் (த)
(4) * திரு. கு. மா. பாலசுப்ரமணியம் (த)
(5) திரு. ஜி. ஆர். தாமோதரன் (ஆ)
(6) * திரு. டி'மான்டி டென்சில் வின்செண்ட் (ஆ)
(7) திரு. ஆ. திராவிட மணி (த)
(8) திரு. இளம்பரிதி (த)
(9) திரு. கோ. சி. மணி (த)
(10) திரு. எச். எல். முருகேசன் (த)
(11) திரு. வி. ஆர். பெரியண்ணன் (த)
(12) * திரு. எஸ். ராமகிருஷ்ண தேவர் (த)
(13) திரு. என். சுந்தரேசத் தேவர் (த)
(14) * திரு. ஜி. சுவாமிநாதன் (த)
(15) * திரு. பி. ஆர். தாமஸ் (ஆ)
(16) திரு. ஏ. தங்கவேலு (த)

1974 ஏப்ரல் 22] [மேலவைத் தலைவர்]

(17) திரு. ஏ. கே. வில்வம் (த)
(18) திரு. பி. எல்லமந்தா (ஆ)
(19) செல்வி சி. யோகாம்பாள் (த)

(பிற்பகல் 4.20)

2. இரங்கற் தீர்மானம்.

மேலவை முன்னாள் உறுப்பினரான டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் மறைவு குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அறிவுலக இரட்டையர்களில் ஒருவரான டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் அவர்கள் சென்ற 15-ஆம் தேதி இரவு காலமான செய்தியை இவ்வவைக்கு ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்து, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை இரங்கற் தீர்மானத்தை முன்மொழியுமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையில் 1946 முதல் 1970 வரை உறுப்பினராகவும், எதிர்க் கட்சித் தலைவராகவும் விளங்கியவரும், 27 ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தராகப் பதவி வகித்தவரும், கல்வித் துறையிலும், மருத்துவத் துறையிலும் ஆக்கபூர்வமான பணிகள் பல புரிந்த தலைசிறந்த வல்லுநரும், உலக அறிஞர் பெரு மக்களில் ஒருவராகத் திகழ்ந்தவரும், பொதுவாழ்வில் பண்பு மிக்கவருமான டாக்டர் ஏ. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் இயற்கை எய்தியதைக் குறித்து இம்மன்றம் தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது"

என்ற இரங்கற் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தலைவரவர்களே, அறிவுலக மேதைகளில் ஒருவரான டாக்டர் ஏ. எல். முதலியார் அவர்களுடைய மறைவு தமிழகத்திற்கு மாத்திரமல்லாமல், அனைத்து இந்தியாவுக்கு மாத்திரமல்லாமல், உலக நாடுகளில் பலவற்றிலும் தாங்கொணாத வேதனையைத் தருகின்ற ஒன்றாகும். இந்த மாமன்றத்தில்

(*) கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.
(த) தமிழில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.
(ஆ) ஆங்கிலத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்ட உறுப்பினர்கள்.